### ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான 15 பொருட்கள் அடங்கிய

# ரூ.499 விலையில் 'அமுதம் பிளஸ் மளிகைத் தொகுப்பு!'

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.23-

தமிழ்நாட்டில் விவசாயப் பெருமக்களின் நலனைப் பாதுகாத்திடவும், பொதுவிநியோகத் திட்டப் பொருட்களைக் கொள்முதல் செய்து கிடங்குகளில் இருப்பு வைத்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்து பொதுவிநியோகத் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972இல் தொடங்கப்பட்டு பொன்விழா ஆண்டினைக் கடந்து இந்தியாவிற்கே முன்மாதிரியாக சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

**தரமான பொருள் நியாயமான விலை** என்ற கோட்பாட்டுடன் இயக்கப்பட்டுவரும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. சென்னை கோபாலபுரம் மற்றும் அண்ணாநகரில் இயங்கி வரும் அங்காடிகள் முதற்கட்ட மாக நவீனமயமாக்கப்பட்டு துணை முதலமைச்சர் மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு இலாப நோக்கமின்றி தரமான பொருட்கள் நியாயமான விலையில் பொதுமக்களின் பேராதரவுடன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக வரும் பண்டிகைக் காலங்களைக் கவனத்தில் கொண்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வீடுகளில் அன்றாடம் பயன்படுத்தப்படும் 15 வகையான மளிகைப்பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பின் விற்பனையினை இலாப நோக்கமின்றி ரூ.499/ விலையில் **அமுதம் பிளஸ் மளிகைத் தொகுப்பு** என்ற பெயரில்




சென்னை கோபாலபுரம், அமுதம் மக்கள் அங்காடியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் மக்கள் அங்காடிகள் மூலம் ரூ.499/ விலையில் ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான 15 மளிகைப்பொருட்கள் அடங்கிய அமுதம் பிளஸ் மளிகைத் தொகுப்பு விற்பனைத் திட்டத்தினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். நா. எழிலன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை மருத்துவர். ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி மு.நந்தினி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று (22.10.2024) சென்னை கோபாலபுரம் அமுதம் மக்கள் அங்காடியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் துவக்கி வைத்தார்கள். மஞ்சள் தூள், உப்பு, கடுகு, சீரகம், வெந்தயம், சோம்பு, மிளகு, மிளகாய், தனியா, புளி, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, பாசிப்பருப்பு, வறு கடலை மற்றும் பெருங்காயத்தூள் ஆகிய பொருட்கள் இம்மளிகைத் தொகுப்பில் அடங்கியுள்ளன.

இந்த மளிகைத்தொகுப்பின் விற்பனை முதற்கட்டமாக சென்னை கோபாலபுரம், அண்ணாநகர், பெரியார் நகர் அமுதம் மக்கள் அங்காடிகளிலும், அடையார், சூளைமேடு, சிந்தாதிரிப்பேட்டை, கலைஞர் கருணாநிதி நகர், நந்தனம் ஆகிய பகுதிகளில் உள்ள 10 அமுதம் நியாய விலைக் கடைகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

அமுதம் பிளஸ் மளிகைத்தொகுப்பு விற்பனைத் துவக்க விழா கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவர் ஜெ. ராதாகிருஷ்ணன், அவர்களின் தலைமையிலும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். எழிலன் நாகநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே. சிற்றரசு, 9வது மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், 111வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி மு. ஆ. நந்தினி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் பொதுமக்கள்திரளாகக் கலந்து கொண்டனர்.



**ப**தவி என்பது
களியாட்ட அரங்கமல்ல.
கனி இதழ் அமுதம் அல்ல.
கடமையைப் புரிந்திட,
நுடமுற்று நலிவோர்க்கு
ஊன்றுகோலாய்
உதவிட,
கருணையைப்
பொழிந்திட
தாங்கொணாது
அலைவார்க்குத்
தக்க வழித் துணையாகிட
அது ஓர் அருமையான
வாய்ப்பு !

**— முத்தமிழறிஞர் கலைஞர்**

### நாளை (24ஆம் தேதி) சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில்

# மாமன்னர் மருது பாண்டியர்கள் 223வதுஆண்டு நினைவு தினம்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்- தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி- கே.ஆர்.பெரியகருப்பன்- ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி. மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராசன் மரியாதை

சிவகங்கை, அக். 23-

சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். இவர்கள் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக முதல் முதலாக போரினை தொடங்கியவர்கள். ஆங்கிலேயர்கள் மருது பாண்டியர்களை கைது செய்யும் எண்ணத்தில் முயற்சி செய்தும் அவர்களை கைது செய்ய முடியவில்லை.

இறுதியில் மருதுபாண்டியர்கள் சரணடையாவிட்டால் காளையார் கோவிலில் அவர்களால் கட்டப்பட்ட ராஜகோபுரத்தினை பீரங்கி வைத்து தகர்த்து விடுவதாக அறிவித்தனர். அந்த அறிவிப்பினை கேட்ட மருது பாண்டியர்கள் திருப்பத்தூரில் ஆங்கிலேயர் முன் சரணடைந்தார்கள். சரண் அடைந்த மருது பாண்டியர் களை இதே 223 ஆண்டுகளுக்கு முன்பாக அக்டோபர் மாதம் 24ம் தேதி திருப்பத்தூரில் ஆங்கிலேயர்கள் தூக்கிலிட்டார்கள்.

அத்தகைய வீரம், தீரம் நிறைந்த வரலாற்று புகழ் மிக்க மாமன்னர் மருது பாண்டியர்களின் நினைவினை பாராட்டி போற்றிடும் வகையில் மாமன்னர் மருதுபாண்டியர்களுக்கு அப்போதைய முதல்வர் கலைஞர் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர் நினைவு மண்டபம் மற்றும் திருவுருவச் சிலையும் அமைத்தார். அதை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் தேதி அரசு விழாவாக கொண்டாடப்படும் என்றும் அரசின் சார்பில் மாமன்னர்மருதுபாண்டியர்கள் நினைவு இடத்தில் மரியாதைசெலுத்தப்படும் என்று ஆணைபிறப்பித்தார்.

அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் தேதி மாமன்னர் மருதுபாண்டியர்கள் நினைவிடத்தில் அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது . இந்த ஆண்டு நாளை (24ஆம் தேதி வியாழக்கிழமை) 223 வது நினைவுதினத்தினை முன்னிட்டு காலை 8 மணி அளவில் தேசியக் கொடியை மாவட்ட ஆட்சியர் திருமதிஆஷா அஜித் ஏற்றி வைக்கிறார். அதனைத் தொடர்ந்துமுதல்வர் மாமன்னர் மருது பாண்டியர் வாரிசுதாரர்கள் பொங்கல் வைத்து வழிபாடு நடத்துகிறார்கள். அதை தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்திரவின் பேரில் அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன்,, கே.கே.எஸ்.எஸ்.ராமச்சந்திரன், எஸ்.ரகுபதி, ஆர். எஸ்.ராஜகண்ணப்பன், தங்கம் தென்னரசு,டி. ஆர். பி. ராஜா, பி.மூர்த்தி, பி. டி .ஆர். பழனிவேல் தியாகராஜன், ஆகியயோர் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்துகிறார்கள்.

அதைத் தொடர்ந்து மருதுபாண்டியர்கள். தூக்கிலிடப் பட்ட இடமான பஸ் நிலையம் எதிரே அவர்களது நினைவிடத்தில் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்துகிறார்கள் .

இந்த நிகழ்ச்சியில் பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்கி றார்கள். அதனைத்தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள், பல்வேறு சமுதாயத் தலைவர்களும் நினைவிடத்தில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்துகிறார்கள் .

இது குறித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. சிவகங்கையை ஆட்சி புரிந்து நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் நீத்த மாமன்னர் மருது பாண்டியர்கள் நினைவு தினத்தினை முன்னிட்டு நாளை24ம்தேதி திருப்பத்தூரில் அமைச்சர் பெருமக்கள் அரசின் சார்பில் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்த உள்ளார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,சார்புஅணி. நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு

இராமநாதபுரம், அக்.23-

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை 24.10.2024 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி, தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பால்வளத்துறை மற்றும் கதர் வாரியத் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ். இராஜகண்ணப்பன், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர், பரமக்குடி தொகுதி பார்வையாளர், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் திருவாடனை தொகுதி பார்வையாளர, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி



அமைப்பாளர் மருத்துவர் சுதர்சன், இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர். விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் .வேல்முருகன், முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள். நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள். கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. பசும்பொன் தேவர் திருமகனார் ஜெயந்தி விழா கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகை. 2. துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர்அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம். 3.வாக்காளர் சேர்க்கை, நீக்கல், திருத்தம் சிறப்பு முகாம். 4 . கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதி

# தூய்மைப் பணியாளர்கள் 1011 பேருக்கு புத்தாடை!

## எஸ்.தங்கபாண்டியன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

இராஜபாளையம், அக்.23-

இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன், எம்.எல்.ஏ, ஏற்பாட்டில் இராஜ பாளையம் P.S.குமாரசாமி ராஜா திருமண மண்டபத்தில் தனது 95,96,97,98,99 வது மாத ஊதியத்திலிருந்து 5,25,000 கொரோனா காலங்களில் சிறப்பாக பணியாற்றிய முன்கள பணியாளரான தூய்மை பணியாளர்களை வாழ்த்தி பாராட்டி கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும் 2020ம் ஆண்டு முதல் தொடர்ந்து 5வது முறையாக இராஜபாளையம் சட்டமன்ற தொகுதியில் சிறப்பாகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றிய தூய்மை பணியாளர்களான 521 ஆண்களுக்கு வேஷ்டி சட்டையும் இனிப்பும் 490 பெண்களுக்கு சேலைகளும் இனிப்புகளும் என மொத்தம் 1011 நபர்களுக்கு எஸ். தங்கபாண்டியன் எம்.எல்.ஏ மற்றும் ஒன்றிய சேர்மன் G.சிங்கராஜ், நகராட்சி சேர்மன் பவித்ரா ஷியாம், ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி மணிகண்டராஜா பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ் பேரூர் கழக செயலாளர்கள் இளங்கோவன் சிங்கம்புலி அண்ணாவி நகர துணை சேர்மன் கல்பனா மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு நிர்வாகிகள் கிளை நிர்வாகிகள் கழக முன்னோடிகள் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் தூய்மைப் பணியாளர்கள் 1011 பேருக்கு புத்தாடைகளை சட்டமன்ற உறுப்பினர் எஸ். தங்கபாண்டியன் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 20 சதவிகித போனஸ் வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கூட்டுறவுத் தொ.மு.ச. நன்றி!

சென்னை,அக்.23-

05.09.2024அன்று நமது தொ.மு.ச.பேரவையின் பொதுச்செயலாளர் மு.சண்முகம் மாநிலங்களவை உறுப்பினர் கூடுதல் தலைமைச்செயலாளர் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர்ஜெ.இராதாகிருஷ்ணன் சந்தித்து கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அனைவருக்கும் 20% போனஸ் வழங்கிடகோரி வலியுறுத்தினார்கள்.

இதனை கவனமுடன் பரிசீலித்தபின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார்கள். அதனை ஏற்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பை வெளியிட்டுள்ளார் .

கூட்டுறவு தொ.மு.ச. சார்பில் முதலமைச்சர், துணை முதலமைச்சர், கூட்டுறவுத்துறை அமைச்சர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்,கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், கூடுதல்பதிவாளர் (நுகர்வோர் பணிகள்),தொ.மு.ச.பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் மாநிலங்களவை உறுப்பினர், பேரவை செயலாளர் இரா.பொன்னுராம்,மாநில மொ.வி.பண்டகசாலைகள் தொ.மு.ச. பொதுச் செயலாளர் சு.பத்மநாபன் ஆகியோர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அனைத்து கூட்டுறவு தொ.மு.ச. அறிக்கையில் தெரிவித்துள்ளது.